டிபி ஆன்லைன்பேங்கிங் - விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

பொதுவானவை

— இந்த விதிமுறைகளைப் படித்து, மதிப்பிட்டு, புரிந்துகொண்டதாக வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார். இணைய வங்கிச் சேவைகள் விண்ணப்பப் படிவத்தில் கையொப்பமிட்டதால் அல்லது பயனர் பெயர்/ அல்லது கடவுச்சொல்லை பெற்றுக்கொண்டதாக அங்கீகரித்ததால் வாடிக்கையாளர் நிபந்தனையின்றியும் மாற்றமுடியாதபடியும் இந்த விதிமுறைகளை ஏற்றுக்கொள்கிறார். இந்தச் சேவைகளைப் பெற இந்த விதிமுறைகள் வாடிக்கையாளருக்கும் வங்கிக்கும் இடையில் ஒப்பந்தமாக அமையும் மேலும் வங்கியின் பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் வங்கி பிற சேவை வழங்குநருடன் ஒப்புக்கொள்ளும் பிற விதிகளுக்கும் கட்டுப்பட்டவையாக இருக்கும்.

— இணைய வங்கிச் சேவைகள் வாடிக்கையாளருக்கு வங்கியின் விருப்புரிமையின் பேரில் மற்றும் வாடிக்கையாளரின் வசதிக்காக மட்டுமே வங்கியால் வழங்கப்படுகின்றன என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார். வாடிக்கையாளர் தனது சொந்த பொறுப்பில் சேவைகளைப் பெறலாம்.

— வாடிக்கையாளருக்கு வழங்கப்படும் கணக்கு அல்லது சேவைகள் எந்தவொரு மூன்றாம் தரப்பினருக்கும் எந்த சூழ்நிலையிலும் ஒதுக்கப்படவோ அல்லது மாற்றவோ முடியாது என்பதையும் வாடிக்கையாளர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியால் மட்டுமே பயன்படுத்தப்படலாம் என்பதையும் வாடிக்கையாளர் மேலும் ஒப்புக்கொள்கிறார்.

— உட்பிரிவு தலைப்புகள் வசதிக்காக மட்டுமே மற்றும் தொடர்புடைய உட்பிரிவின் பொருளை பாதிக்காது.

— எந்தவொரு விதியும் சட்டத்திற்குப் புறம்பானது, செல்லாதது அல்லது நடைமுறைப்படுத்த முடியாதது என ஏதாவது தகுதியான அதிகார வரம்பிற்கு உட்பட்ட நீதிமன்றத்தால் நிறுத்தப்பட்டால், அத்தகைய விதி இங்கு நீக்கப்பட்டதாகக் கருதப்படும், மேலும் மீதி விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் முழு வலிமையோடு நடைமுறையில் தொடரும். இங்கு ஆண்பால் பாலினம் பற்றிய குறிப்பு பெண்பால் பாலினத்தை உள்ளடக்கும்.

வரையறைகள்

— இந்த விதிமுறைகளில் காணப்படும் அனைத்து பெரிய எழுத்துச் சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் (கேப்பிட்டலைஸ்டு வேர்ட்ஸ் அண்டு பாராசஸ்) வேறுவிதமாகக் குறிப்பிடப்படாவிட்டால், இங்கே குறிப்பிடப்பட்டுள்ள பொருளையே குறிக்கும்:

— ஏற்கனவே இருக்கும், புதிய மற்றும் எதிர்கால (மாற்றப்பட்ட அல்லது திருத்தப்பட்ட படிவம் உட்பட ஆனால் அவை மட்டும் அல்லாமல்) கணக்கு(கள்), (எந்த வடிவமும் உட்பட, ஆனால் வழக்கமான வங்கி மற்றும் எந்த வகையான வங்கி அல்லது நிதி உறவுகள் உட்பட), வங்கியில் நடத்தப்பட்ட, இயக்கப்பட்ட மற்றும்/ அல்லது தனித்தனியாக மற்றும்/ அல்லது கூட்டாக பரிமாற்றம் செய்யப்பட்டவை அனைத்தும் கணக்கில் அடங்கும்.

— வங்கி என்பது டாய்ச் வங்கி லிமிடெட் (டாய்ச்சு பேங்க் Limited) மற்றும் இந்தியாவில் உள்ள அதன் கிளைகளைக் குறிக்கும் மற்றும் அதன் சூழலுக்கும் அல்லது அர்த்தத்துக்கும் மாறுபட்டதாக இல்லாமல் இருந்தால், எந்தவொரு நபரையும் அல்லது நிறுவனத்தையும் வங்கியே இங்கு விலக்கியிருந்தால் தவிர, ஏதாவது கணக்குகள் அல்லது சேவைகளை வழங்குதல் அல்லது வேறு ஏதாவது வங்கிச் செயல்பாடுகள் தொடர்பாக, எந்தவொரு நோக்கத்திற்காகவும் வங்கியுடன் இணைக்கப்பட்ட அல்லது தொடர்புடைய அதன் அதிகாரிகள், ஊழியர்கள், முகவர்கள், ஒப்பந்ததாரர்கள், ஆலோசகர்கள், பிரதிநிதிகள், வாரிசுகள், உள்ளடக்கம் வழங்குபவர்கள் மற்றும் அத்தகைய நபர்கள் அல்லது நிறுவனங்கள் இதில் அடங்கும்.

— வணிக நேரம் என்பது வணிகத்திற்காக வங்கி திறந்திருக்கும் கால அளவைக் குறிக்கிறது மற்றும் அவ்வப்போது அறிவிக்கப்படும் வங்கியின் ஒவ்வொரு கிளைக்கும் வணிக நேரம் மாறுபடலாம்.

— கட்டணங்கள் என்பது வங்கியால் விதிக்கப்படும் அனைத்துக் கட்டணங்கள் (சார்ஜஸ்), கட்டணத் தொகைகள் (ஃபீஸ்), வட்டி, செலவுகள் அல்லது ஏதாவது ஒரு கணக்கு மற்றும்/ அல்லது சேவைகள் மற்றும்/ அல்லது வாடிக்கையாளர் மீது சுமத்தப்படும் அவ்வப்போது மாற்றியமைக்கப்படும் சேவை வரியை உள்ளடக்கியது.

— வாடிக்கையாளர் என்பது பின்வரும் நபர்/ நபர்களைக் குறிக்கிறது:

  — தற்போது யாருடை பெயரில் வங்கியில் கணக்கு (கள்) உள்ளனவோ அல்லது இப்போது/ எதிர்காலத்தில் எந்நேரத்திலும் தொடங்கப்பட கூடுமோ அந்த நபர் அல்லது நபர்(கள்):

  — வங்கியின் தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் யாருக்கு சேவைகள் கிடைக்கின்றனவோ அந்த நபர்/நபர்கள்

  — அட்டைதாரர் என்பது பொருந்தக்கூடிய இடங்களில், ஒருமை மற்றும் பன்மை இரண்டையும் உள்ளடக்கியது; மேலும் கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்களை தனித்தனியாகவும் கூட்டாகவும் குறிக்கும்.

— இணையம் என்பது கணினிகள் மற்றும் பிற மின்னணு சாதனங்களின் வலையமைப்பைக் குறிக்கிறது, அவை தகவல்களைப் பகிர்ந்துகொள்ளும் மற்றும் பரிமாறிக்கொள்ளும் மற்றும் ஒரே நேரத்தில் உலகளாவிய ஒளிபரப்புத் திறன், தகவல் பரவலுக்கான ஒரு பொறிமுறை, புவியியல் இருப்பிடத்தைப் பொருட்படுத்தாமல் தனிநபர்கள் மற்றும் அவர்களின் கணினிகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு மற்றும் தொடர்புக்கான ஊடகம்.

— அறிவுறுத்தல் என்பது எந்தவொரு சேவையையும் குறிக்கும் வகையில் வாடிக்கையாளரால் வழங்கப்படும் ஏதேனும் அறிவுறுத்தல் அல்லது கட்டளை.

— இணைய வங்கிச் சேவை அல்லது சேவைகள் என்பது, வங்கி தனது சொந்த விருப்புரிமையின் பேரில் பல்வேறு பரிமாற்றங்களை மேற்கொள்ள அல்லது இணையத்தில் தகவல்களைப் பெற கணக்கில் உள்ள இருப்பு, கணக்கில் உள்ள பரிமாற்றங்கள் பற்றிய விவரங்கள் போன்ற சேவைகள் உட்பட கணக்கு அறிக்கை, நிதிமாற்றல் மற்றும் இணையம் மூலம் அவ்வப்போது வழங்க வங்கி முடிவு செய்யலாம். ஒரு குறிப்பிட்ட சேவை கிடைத்தல்/ கிடைக்காமல் இருத்தல் போன்றவை வாடிக்கையாளருக்கு மின்னஞ்சல் மூலமாகவோ,

வங்கியின் வலைப்பக்கம் மூலமாகவோ அல்லது வங்கியால் பொருத்தமானதாகக் கருதப்படும் எழுத்து மூலமாகவோ தெரிவிக்கப்படும். அத்தகைய இணைய வங்கிச் சேவைகள் வங்கியால் நேரடியாகவோ அல்லது அதன் பங்குதாரர்கள் மூலமாகவோ அல்லது ஒப்பந்த சேவை வழங்குபவர்கள் மூலமாகவோ வழங்கப்படலாம்.

— கடவுச்சொல் என்பது, வாடிக்கையாளருக்கு வங்கியால் ஒதுக்கப்பட்ட மற்றும்/ அல்லது வாடிக்கையாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும்/ அல்லது வாடிக்கையாளரால் தனது விருப்பப்படி மாற்றியமைக்கப்பட்ட, கணக்கை இயக்குவதற்கு மற்றும்/ அல்லது குறிப்பிட்ட சேவைகளை இணையம் மூலம் பெறுவதற்கு, தற்போக்காக உருவாக்கப்பட்ட ரகசிய மற்றும் அந்தரங்கக் குறியீட்டை உள்ளடக்கியது.

— ஆர்பிஐ (ஆர்பிஐ) என்பது இந்திய ரிசர்வ் வங்கி.

— வழக்கமான பராமரிப்புத் தேவைகள், அதிகப்படியான தேவை, மின்திறன் செயலிழப்பு, கணினிப் பிழைகள், நிரலாக்கப் பிழைகள், மென்பொருள் அல்லது வன்பொருள் பிழைகள், கணினி செயலிழப்பு, இணையம் அல்லது நெட்வொர்க் செயலிழப்பு, மின் செயலிழப்பு, தொலைத்தொடர்பு வலையமைப்பில் உள்ள தவறுகள் போன்றவற்றால் ஏற்படும் சிக்கல்கள் மற்றும் சிரமங்கள் இணைய இணைப்பு இல்லாமை, வங்கியின் சர்வருக்கு இடையேயான தகவல் தொடர்பு பிரச்சனைகள், மற்றும் வாடிக்கையாளரின் கணினி வலையமைப்பு, வங்கியின் சர்வர் அல்லது இணையதளத்தை முடக்குதல், தகவல் தொடர்பு இணைப்புகள் கிடைக்காமை, கணினி மென்பொருள் சிதைவு, சேவை வழங்குநர்களின் உள்கட்டமைப்பு மற்றும் தொலைத்தொடர்பு வலையமைப்பில் ஏற்படும் குறைபாடுகள் மற்றும் பிற தொழில்நுட்பம் தொடர்பான குறைபாடுகள் காரணமாக எழும்; இயற்கைப் பேரிடர், வெள்ளம், தீ மற்றும் பிற இயற்கை பேரழிவுகள், தொழிலாளர் தகராறுகள், சட்டரீதியான கட்டுப்பாடுகள் அல்லது வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பிற சிக்கல்கள் அல்லது சிரமங்கள் உட்பட, ஆனால் அவை மட்டும் அல்லாமல் பிற காரணங்களால் உருவாகும் ஏதாவது சிக்கல்கள் மற்றும் சிரமங்கள் தொழில்நுட்பக் குறைபாடுகளில் அடங்கும்..

— பயனர்பெயர் அல்லது பயனர் ஐடி என்பது வங்கி மற்றும்/ அல்லது கணக்கை இயக்குவதற்கு மற்றும்/ அல்லது இணைய வங்கி மூலம் குறிப்பிட்ட சேவைகளைப் பெறுவதற்காக வங்கியால் தேர்ந்தெடுக்கப்பட்ட அடையாளக் குறியீட்டை உள்ளடக்கியது. இணையதளம் என்பது வங்கிக்கு சொந்தமான நிறுவப்பட்ட மற்றும் பராமரிக்கப்படும் இணையதளம்

பயன்படுத்துதற்குரிய தன்மை

— இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் அனைத்து இணைய வங்கி சேவைகளுக்கும் பொருந்தும்.

— வாடிக்கையாளாரின் முன் அனுமதியின்றி வங்கி தனது முழுமையான விருப்புரிமையின் பேரில், இணைய வங்கிச் சேவையில் வங்கியின் தயாரிப்புகள் அல்லது சேவைகளைச் சேர்க்கலாம் அல்லது இணைய வங்கிச் சேவையின் மூலம் வழங்கப்படும் சில வங்கியின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை நிறுத்தலாம் என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார்.

— இணைய வங்கிச் சேவைகள் அல்லது இணைய வங்கிச் சேவைகளின் பயன்பாட்டிற்காக (பயனர்பெயர் மற்றும் கடவுச்சொல்(கள்) உட்பட) வழங்கப்படும் எந்த மற்றும் அனைத்து தகவல்களும் முற்றிலும் வங்கியின் சொத்தாக இருக்கும் என்பதை வாடிக்கையாளர் மேலும் ஒப்புக்கொள்கிறார். அதன்படி, வங்கி தனது முழு விருப்பத்தின் பேரில், இணைய வங்கிச் சேவைகளைக் கட்டுப்படுத்தலாம் அல்லது பயனர்பெயர், கடவுச்சொல் (கள்) மற்றும்/ அல்லது இணைய வங்கி சேவைகளைப் பயன்படுத்துவதற்கான நோக்கங்களுக்காக வங்கியால் வழங்கப்படும் வேறு ஏதேனும் சேவைகள், அங்கீகார முறைகள்/ சாதனங்களின் பயன்பாட்டைத் திரும்பப் பெறலாம் என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொண்டு ஏற்றுக்கொள்கிறார்.

பரிமாற்றங்களின் பதிவு

வங்கியின் கணினி அமைப்புகள் மூலம் அல்லது பிற வகையில் இணைய வங்கிச் சேவைகள் தொடர்பான பரிமாற்றங்களின் வங்கியின் சொந்தப் பதிவேடு வங்கியால் உறுதியானதாக ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கிறார் மற்றும் ஒப்புக்கொள்கிறார். வங்கியின் அத்தகைய பதிவை தயக்கம் அல்லது எதிர்ப்பு இல்லாமல் அங்கீகரித்து, கைக்கொண்டு, ஏற்றுக்கொள்கிறார். இணையத்தின் சில உள்ளார்ந்த அம்சங்களின் காரணமாக, வாடிக்கையாளர் இணையம் வழியாகச் செய்ய முயற்சி செய்த பரிமாற்றத்தின் வரைவுப் படத்தை வாடிக்கையாளரால் எடுக்க முடியும். இருந்தாலும், வங்கியால் பராமரிக்கப்படும் பதிவு மட்டுமே மேலோங்கி நிற்கும். இணையத்தின் வழி கோரும்போது வங்கியால் மேற்கொள்ளப்படும் அல்லது மேற்கொள்ளப்படாத எந்தவொரு பரிமாற்றத்தையும் வாடிக்கையாளர் நிபந்தனையின்றி அங்கீகரித்து ஒப்புக்கொள்கிறார்.

கடவுச்சொல்(கள்)/ அணுகல்

— இணைய வங்கிச் சேவைகளில் ஏதாவது ஒன்றைப் பெறுவதற்கு வங்கியால் வாடிக்கையாளருக்கு கடவுச்சொல்(கள்) வழங்கப்படும். வாடிக்கையாளர் அதைப் பெறும்போது அது சேதம் இல்லாத சீல் செய்யப்பட்ட உறையில் ("மெயிலர்") உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.. மெயிலரை எந்தவிதக் குளறுபடியும் இல்லாமல் பெற்றுக்கொண்டதை வாடிக்கையாளர் உறுதி செய்ய வேண்டும். இல்லையெனில், உடனடியாக வங்கிக்கு எழுத்து மூலமாகவோ அல்லது தொலைபேசி மூலமாகவோ வாடிக்கையாளர் தெரிவிக்க வேண்டும்.

— தவறான கடவுச்சொல்லை தொடர்ச்சியாக ஐந்து முறை உள்ளிட்டால் (அல்லது வங்கியால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் எண்ணிக்கை) வாடிக்கையாளரின் இணைய வங்கி சேவைகளில் வங்கிக்கான அணுகல் முடக்கப்படும். அத்தகைய நிகழ்வில், குறிப்பிட்ட இடைவெளிக்குப் பின் வங்கி தானாகவே அணுகலை மீண்டும் செயல்படுத்தலாம்.

— வங்கியால் குறிப்பிடப்பட்ட சேவைகள் வாடிக்கையாளர்களால் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படாவிட்டால் பயனர்பெயர்/ கடவுச்சொல்லை முடக்க வங்கி முடிவு செய்யலாம். வாடிக்கையாளர் அணுகலை தற்காலிகமாக முடக்கவும் கோரலாம். இணைய வங்கிச் சேவைகளுக்கான அணுகலை மீண்டும் செயல்படுத்த, வாடிக்கையாளர் ஒரு கடிதம், தொலைபேசி அல்லது வங்கியால் பரிந்துரைக்கப்படும் மற்ற முறைகள் மூலம் வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும், வங்கியால் சரியானதாகக் கருதப்படும், தேவைப்படும் அல்லது பரிந்துரைக்கப்படும் சில விவரங்களையும் அவ்வாறு அனுப்பப்படும் தகவல்களையும் வழங்க வேண்டும்.

— தவறான பரிவர்த்தனைகளுக்கும் நீங்கள் கடவுச்சொல் விவரங்களை விரும்பத்தகாத முறையில் வெளிப்படுத்துவதற்கும் நாங்கள் பொறுப்பாக மாட்டோம். வலைத்தளத்தில் பார்க்கும் விருப்புரிமையும்ம் பரிமாற்ற விருப்புரிமையும் வேறுபட்டவை. உங்கள் விருப்புரிமையை நீங்கள் முழுமையாகப் பயன்படுத்தலாம்

கடவுச்சொல்லின் பாதுகாப்பும் அந்தரங்கமும்

— வாடிக்கையாளர் தனது கணக்கு விவரங்கள் மற்றும் கடவுச்சொல் (கள்) ஆகியவற்றின் ரகசியத்தைப் பராமரிப்பதற்கு அவர் மட்டுமே பொறுப்பு என்பதை ஒப்புக்கொள்கிறார் மற்றும் அங்கீகரிக்கிறார். வாடிக்கையாளர் தனது இணைய வங்கி சேவைகளைப் பயன்படுத்துவதன் பாதுகாப்பைப் பாதுகாக்க வடிவமைக்கப்பட்ட பிற தேவைகளுக்கு இணங்க வேண்டும், அவை வழிகாட்டுதல்களில் அமைக்கப்பட்டுள்ளன அல்லது அவ்வப்போது வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்படுகின்றன.

— வாடிக்கையாளரால் மட்டுமே இணையம் மூலம் அணுகவும் வழிமுறைகளை வழங்கவும் முடியும் என்பதை உறுதிப்படுத்த அவர் எல்லா நேரங்களிலும் பின்வரும் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு இணங்க வேண்டும்:

— வாடிக்கையாளர் தனது கடவுச்சொல்லை அவ்வப்போது அல்லது வங்கி அறிவுறுத்தும்போது மாற்ற வேண்டும்;

— அவர் தான் முன்னர் பயன்படுத்திய அல்லது யூகிக்கக்கூடிய கடவுச்சொல்லைத் தேர்வு செய்யக் கூடாது;

— எப்பொழுதும் தனது கடவுச்சொல் (கள்) ஐப் பாதுகாப்பதற்காகவும், வேறு எவருக்கும் (கூட்டு கணக்கு வைத்திருப்பவர் அல்லது வங்கி ஊழியர் உட்பட) அவரது கடவுச்சொல்லின் எந்த விவரங்களையும் கூறக்கூடாது;

— கடவுச்சொற்களை எந்த மூன்றாம் தரப்பினரும் படிக்கக்கூடிய அல்லது அணுகக்கூடிய வகையில் பதிவு செய்யக்கூடாது;

— கடவுச்சொல்லை மனப்பாடம் செய்து, அதன் பதிவு இருந்தால் அதையும் அழிக்கவும்;

— அவர் சார்பாக இணைய வங்கிச் சேவைகளை இயக்க யாரையும் அனுமதிக்கக் கூடாது;

— அவர் இணையத்தில் உள்நுழைந்திருக்கும் போதும் ஒவ்வொரு முறையும் இணையத்தில் இருந்து வெளியேறும் போதும் உள்நுழைந்த அமைப்பில் இருந்து வெளியேறும் போதும் கவனமாக இருக்க வேண்டும்;

— வேறு யாரும் தனது கடவுச்சொல்லை(களை) கவனிக்கவோ அல்லது நகலெடுக்கவோ இல்லை என்பதை முதலில் உறுதி செய்யாமல், அலுவலகச் சூழல் போன்ற உள்ளூர் பகுதி நெட்வொர்க்குடன் (அல்லது எல்ஏஎன்) இணைக்கப்பட்ட எந்த சாதனம் அல்லது சாதனத்தில் இருந்தும் இணைய வங்கிச் சேவைகளை அணுக வேண்டாம். மேற்கூறிய பாதுகாப்பு நடைமுறைகளுக்கு இணங்கத் தவறியதன் காரணமாக, வங்கிக்கு ஏதாவது இழப்பு ஏற்பட்டால் வாடிக்கையாளர் வங்கிக்கு இழப்பீடு வழங்க நேரிடும்

— வாடிக்கையாளர் தனது கடவுச்சொல் அல்லது அதில் ஒரு பகுதி வேறு யாருக்காவது தெரிந்ததாகவோ அல்லது தொலைந்துவிட்டதாகவோ அல்லது திருடப்பட்டதாகவோ கண்டறியப்பட்டாலோ அல்லது சந்தேகப்பட்டாலோ உடனடியாக இணையத்தின் மூலம் கடவுச்சொல்லை மாற்ற வேண்டும். இது சாத்தியமில்லாத பட்சத்தில், வாடிக்கையாளர் வங்கிக் கிளையில் வணிக நேரத்தின் போது அல்லது தொலைபேசி மூலமாக உடனடியாக வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். புதிய கடவுச்சொல்(கள்) அமைக்கப்படும் வரை, இணைய வங்கிச் சேவைகளைப் பயன்படுத்துவதை வங்கி இடைநிறுத்தலாம். அத்தகைய அறிவிப்புக்கு முன் செய்யப்படும் எந்தவொரு பரிமாற்றத்தினால் ஏற்படும் ஆபத்துக்கு முற்றிலும் வாடிக்கையாளரே பொறுப்பாவார். அத்தகைய இழப்பு அல்லது திருட்டை அல்லது வாடிக்கையாளர் அத்தகைய சம்பவத்தை வங்கிக்கு அறிவிக்கத் தவறியதன் விளைவாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்படும் இழப்புகள் மற்றும்/ அல்லது சேதங்களுக்கு வங்கி பொறுப்பேற்காது.

வாடிக்கையாளாரின் பொறுப்பும்/ வங்கியின் உரிமைகளும்

இணைய வங்கிச் சேவைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் அங்கீகரிக்கப்படாத அணுகலைத் தடுப்பதற்கும் பொருத்தமான தொழில்நுட்பத்தை வங்கி பயன்படுத்தலாம். வங்கி சிறந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முயற்சி செய்தாலும் தொழில்நுட்பத்தின் இயல்பின் காரணமாக அமைப்பை எல்லா நேரங்களிலும் தவறுநிகழாததாகவும் சேதமடையாததாகவும் வைத்திருக்க முடியாது என்பதை வாடிக்கையாளர் புரிந்திருக்கிறார்:

— உங்கள் கணக்கு/ குறியெண் (ஐபிஜஎன்)/ கடவுச்சொல் பற்றிய விவரங்களை எங்கள் வங்கி கேட்பதில்லை. எனவே, வங்கி/ தொழில்நுட்பக் குழுவிடம் இருந்து உங்களிடம் தகவல்களைக் கேட்கும் எவரும் மோசடி நிறுவனங்களாக இருக்கலாம். எனவே எச்சரிக்கையாக இருக்கவும். இணையவழி பரிமாற்றங்களை எவ்வாறு இயக்குவது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும், உங்களுக்குத் தெரியாவிட்டால் அவ்வாறு செய்வதைத் தவிர்க்கலாம். இது சம்பந்தமாக வங்கியின் வழிகாட்டுதலை நீங்கள் நாடலாம். ஆன்லைன் பரிமாற்றங்கள் தவறாக நடப்பதற்கு வங்கி பொறுபாகாது..

— தவறான பரிமாற்றங்கள் மற்றும் உங்களுடைய விவரங்களை முறையில்லாமல் வெளிப்படுத்துவதற்கு நாங்கள் பொறுப்பாக மாட்டோம். வலைத்தளத்தில் பார்க்கும் விருப்பத்தேர்வும் பரிமாற்ற விருப்பத்தேர்வும் வேறுபட்டவை. உங்கள் விருப்பத்தேர்வை நீங்கள் கவனத்துடன் பயன்படுத்தலாம்.

— தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாகவோ அல்லது வங்கிக் கணக்கு/கள் தொடர்பாக வங்கியால் வெளியிடப்பட்ட தகவல்களின் விளைவாகவோ வாடிக்கையாளருக்கு இழப்பு ஏற்பட்டால், எந்த விதத்திலும் வங்கி பொறுப்பேற்காது என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார் மேலும் அதை நிபந்தனையின்றி ஒப்புக்கொள்கிறார். கடவுச்சொற்களைப் பயன்படுத்தி இணைய வங்கி சேவைகள் மூலம் பெறப்பட்ட பரிமாற்றம் அல்லது அறிவுறுத்தலை மேற்கொள்ளும் நபர் அல்லது. வாடிக்கையாளர் தேவைப்படும் பாதுகாப்பையும் இரகசியங்களையும் கடைப்பிடிக்கத்

தவறினால், அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டிற்கு அவரே பொறுப்பாவாரே தவிர எந்தவொரு சூழ்நிலையிலும் வங்கி இதற்காக எந்தப் பொறுப்பையும் ஏற்காது.

— வாடிக்கையாளர் வங்கியின் எழுத்துப்பூர்வ கோரிக்கையின் பேரில் உடனடியாக வங்கிக்கு இழப்பீடு வழங்க வேண்டும் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளை வாடிக்கையாளரின் எந்த வகையிலாவது மீறியதன் காரணமாக வங்கிக்கு ஏற்படும் பொறுப்புகள், சேதங்கள், செலவுகள், செலவினங்கள், உரிமைகோரல்கள் அல்லது கோரிக்கைகள் அல்லது இழப்பு ஆகியவற்றிற்கு எதிராக வங்கிக்கு இழப்பீடு வழங்க வேண்டும்.
— இணைய வங்கிப் பரிமாற்றங்கள் தொடர்பாக வாடிக்கையாளருக்கு இணைய வங்கி மோசடி காப்பீட்டை வழங்கும் வங்கியின் கூடுதல் சேவை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது:-

— புவியியல் வரம்பிற்குள்ளும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டும் மிகவும் குறிப்பாக கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புக்கு உட்பட்டும் வங்கி அதன் சொந்தச் செலவில் இணைய வங்கி பரிமாற்றங்களுக்கான காப்பீட்டைச் செய்யும்.
— வாடிக்கையாளர் தனது கணக்கில் ஏதாவது மோசடியான பரிமாற்றங்கள் நடந்தால், அந்த இணைய வங்கி மூலம் மேற்கொள்ளப்பட்ட மோசடியான பரிமாற்றங்களால் ஏறபட்ட இழப்பு பற்றி தான் இருக்கும் நகரத்தில் உள்ள 24 மணிநேர தொலைபேசி வங்கி எண்ணை அழைத்து வங்கிக்குத் தெரிவிக்க வேண்டும். தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க வாடிக்கையாளரின் பயனர் ஐடியை உடனடியாக வங்கி செயலிழக்கச் செய்யும்.
— கடவுச்சொற்களின் பாதுகாப்பிற்கு வாடிக்கையாளரே பொறுப்பாவார். இங்கு கூறப்பட்டுள்ளபடி அவற்றைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். கடவுச்சொல் (கள்) தவறாகப் பயன்படுத்தப்பட்டால் உள்ளூர் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கையை ("எஃப்ஐஆர்") பதிவு செய்து, அதன் நகலை உடனடியாக உள்ளூர் வங்கிக் கிளைக்கு வாடிக்கையாளர் அனுப்ப வேண்டும். .
— வாடிக்கையாளர் பின்வரும் ஆவணங்களை வங்கிக்கு அனுப்ப வேண்டும்:-
  — ஒரு காவல்துறை அதிகாரியால் முறையாக அங்கீகரிக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்);

  — இழப்பு/ தவறான பரிமாற்றம் பற்றிய விவரத்துடன் ஒரு கடிதம்.

  — வங்கியின் திருப்திக்கு ஏற்ப தேவைப்படும் மற்ற அனைத்து ஆவணங்களும்.

— ஒரு பரிமாற்றத்துக்கான பொறுப்பு ஒரு கணக்கிற்கு அதிகபட்சம் ரூ. 2,00,000/-.
— நேரடி பண இழப்பு ("இழப்பு") பற்றி தேவைப்படும் ஆவணங்களுடன் வாடிக்கையாளர் ஏதாவது தகவல் தெரிவித்தால், இழப்பைப் புகார்

அளிப்பதற்கு முன் அத்தகைய மோசடிப் பரிமாற்றம்(கள்) தொடர்பாக அதன் சொந்த விசாரணையை நடத்த வங்கிக்கு அதிகாரம் உண்டு. அத்தகைய விசாரணையில் வாடிக்கையாளரின் குடும்ப உறுப்பினர்கள்/ உறவினர்கள் அல்லது அவரது பணியாளர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சம்பந்தப்பட்டிருப்பது தெரியவந்தால், அத்தகைய கொள்கையால் கிடைக்கும் பலனை வாடிக்கையாளருக்கு வழங்க மறுப்பதுடன், வாடிக்கையாளருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கவும் வங்கிக்கு அதிகாரம் உள்ளது. விசாரணைக்குப் பின்தான் தற்காலிக வரவு வைக்கப்படும். வங்கியின் விசாரணையின் முடிவுகள் இறுதியானது மட்டுமல்லாமல் வாடிக்கையாளரைக் கட்டுப்படுத்தும்.

- குறிப்பிட்ட கணக்கிற்கான பிடித்துவைக்கப்படும் நிதி (நிதியை வைத்திருங்கள்) வங்கியால் விடுவிக்கப்படும் வரை வாடிக்கையாளரால்ர் கணக்கை மூட முடியாது.
- பின்வரும் நிலைகள் இருந்தால் மட்டுமே இந்த இணைய வங்கி மோசடிக் காப்பீட்டின் பயனை வாடிக்கையாளர் பெறுவார் என்று இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது:-
    - பரிமாற்றம் நடைபெறும் கணக்கு சிறந்த நிலையில் இருக்கவேண்டும்
    - இந்த இழப்பை அறிவிக்கும் முன் கடந்த 12 மாதங்களில் இரண்டுக்கு மேல் அங்கீகரிக்கப்படாத நிகழ்வுகள் நடந்திருக்கக்கூடாது
    - இணைய வங்கிக் கடவுச்சொற்களைப் பாதுகாப்பதில் அலட்சியம் காட்டவில்லை என்பதை வாடிக்கையாளர் நிருபிக்க வேண்டும்.

- இணைய வங்கி மோசடிக் காப்பீட்டுக் கொள்கையின் கீழ் உள்ள வங்கியின் பொறுப்பு இங்கு 8வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பொது விலக்குகளுக்கு உட்பட்டது மேலும் 8வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதால் ஏதேனும் இழப்பு ஏற்பட்டால் இணைய வங்கி இழப்புக் கொள்கையின் கீழ் வாடிக்கையாளர் எந்தப் பலனையும் பெற முடியாது.

பரிமாற்றங்களின் செயல்முறையாக்கம்

- கணக்கில் போதுமான பணம் இருந்தால் மட்டுமே இணைய வங்கிச் சேவைகள் மூலம் பரிமாற்றங்களை வங்கி செயல்படுத்தும் என்பதை வாடிக்கையாளர் ஒப்புக்கொள்கிறார். வாடிக்கையாளரிடம் போதுமான பணம் இல்லை என்றால், வங்கி அத்தகைய பரிமாற்றம் அல்லது அறிவுறுத்தலை நிராகரிக்கலாம்.
- இணைய வங்கிச் சேவைகள் மூலம் செய்யப்படும் பரிமாற்றங்கள் கைமுறையாக அல்லது மின்னணு முறையில் செயலாக்கப்படுகிறதா மற்றும்/ அல்லது அவற்றை உடனடியாகப் புதுப்பிக்க முடியுமா அல்லது வணிக நேரம் முடிந்த பின் செயலாக்கப்படுகிறதா என்பதைப் பொறுத்து, அவற்றைச் செயலாக்குவதற்கான நேரம் மாறுபடலாம். பணம் செலுத்துவதை நிறுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் பிற அவசர/முக்கியமான கோரிக்கைகளுக்கு, வாடிக்கையாளர் வங்கியுடன் தொடர்ந்து தொடர்பில் இருக்க வேண்டும் மேலும் அது வங்கியால் கைமுறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா/ செயல்படுத்தப்படுகிறதா

என்பதை உறுதிசெய்ய வேண்டும். வங்கியின் நியாயமான கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளின் காரணமாக இந்த பணம்செலுத்தல்களில் ஏதாவது ஒன்றைச் செய்ய தவறியதற்கு அல்லது தாமதமாகப் பணம் செலுத்துவதற்கு வங்கி பொறுப்பாகாது.

— இணைய வங்கி சேவைகள் மூலம் ஓர் அறிவுறுத்தலை வாடிக்கையாளர் வழங்கிய பின் அவரால் அதை மாற்ற முடியாது. வாடிக்கையாளர் வழங்கிய எந்த அறிவுறுத்தலையும் மீள்மாற்றம் செய்யவேண்டும் என்று (reverse) அல்லது நிபந்தனையுடன் கூடிய அல்லது மீள்மாற்றம் செய்யக்கூடிய அறிவுறுத்தலை ஏற்றுக்கொள்வது அல்லது சாதாரண வங்கி நடைமுறைகளைப் பின்பற்றி செலுத்த முடிந்ததை விட மூன்றாம் தரப்பினருக்கு விரைவில் பணம் செலுத்த வேண்டும் என்று வங்கிக்கு எந்தக் கடமையும் கிடையாது; வங்கி தனது விருப்பப்படி வங்கி முறையின் விதிகள் மற்றும் நடைமுறைகளின் கீழ் வாடிக்கையாளரின் செலவில் சாத்தியமாகும் அளவிற்கு இவற்றை மீள்மாற்றம் செய்ய முயலலாம்.

— மின்னணு பணப் பரிமாற்றம் மூலம் பணம் செலுத்துவது வருமான வரிச் சட்டம், 1961 இன் பிரிவு 40A (3) க்கு உட்பட்டது என்பதை வாடிக்கையாளர் இதன் மூலம் உறுதிசெய்து ஒப்புக்கொள்கிறார்.

— இணைய வங்கிச் சேவைகள் மூலம் கிடைக்கும் நிதித் தகவல்கள் குறிப்பு நோக்கங்களுக்காக மட்டுமே. இந்தச் சேவையின் மூலம் கிடைக்கும் கணக்குத் தகவல், வங்கியிடம் இருக்கும் பரிமாற்றங்களைப் பிரதிபலிக்காது; ஆனால் அவை செயல்படுத்தப்படுவதில்லை அல்லது இன்னும் பணம் செலுத்துவதற்குச் சரிபார்க்கப்பட வேண்டும். அத்தகைய நிதித் தகவலின் காரணத்தால் அல்லது அதன் விளைவாக வாடிக்கையாளர் அல்லது மூன்றாம் தரப்பினரால் ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு வங்கி பொறுப்பேற்காது.

மென்பொருள் மற்றும் வன்பொருள்

பொருந்தக் கூடியதுமான அனைத்து மென்பொருட்களையும் கணினிகளையும் வாடிக்கையாளர் தன்னுடைய செலவில் வாங்கி பராமரித்து புதுப்பித்து/ மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.. வங்கி தனது மென்பொருள், வன்பொருள், இயக்க முறைமைகள் போன்றவற்றை அவ்வப்போது மாற்றவோ, வித்தியாசப்படுத்தவோ அல்லது மேம்படுத்தவோ உரிமை கொண்டது, மேலும் வாடிக்கையாளரின் மென்பொருள், வன்பொருள், இயக்க முறைமைகளை ஆதரிக்கும் எந்தக் கடமையும் வங்கிக்கு இல்லை. அவை வாடிக்கையாளரின் முழுப் பொறுப்பாகும்.

வரம்புகள்

வாடிக்கையாளர்களால் இணையம் மூலமாகவோ அல்லது வேறுவிதமாகவோ மேற்கொள்ளப்படும் எந்தவொரு பரிமாற்றத்துக்கும் குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச வரம்புகளை வங்கி தன் விருப்பத்தின் பேரில் மட்டுமே அமைத்து மீட்டமைக்கும் மேலும் அத்தகைய வரம்புகள் கணக்கில் இருக்கும் போதுமான இருப்புக்கு உட்பட்டதாக இருக்கும். அத்தகைய வரம்புகள் வங்கியால் அவ்வப்போது பரிந்துரைக்கப்படும் அளவுருக்களின் அடிப்படையில் இருக்கலாம்

அறிவுசார் சொத்துக்கள்
எந்தவொரு சேவையின் அடிப்படையாகவும் உள்ள மென்பொருளில் காணப்படும் அறிவுசார் சொத்துரிமைகள் மற்றும் இணைய வங்கிச் சேவைகள் அணுகல் கணக்கைப் பெறுவதற்குத் தேவைப்படும் பிற மென்பொருள்கள் அனைத்தும் வங்கி அல்லது அந்தந்த விற்பனையாளர்களின் சட்டப்பூர்வ சொத்து என்பதை வாடிக்கையாளர் அங்கீகரித்து ஒப்புக்கொள்கிறார். கணக்குகளை அணுகுவதற்கும், இணைய வங்கிச் சேவைகளைப் பயன்படுத்துவதற்கும் வங்கி வழங்கிய அனுமதி மென்பொருளின் அறிவுசார் சொத்துரிமையில் எந்தவொரு தனியுரிமை அல்லது உரிமையையும் உணர்த்தாது. மேலே குறிப்பிட்டுள்ள மென்பொருளை மாற்றவோ, மொழிபெயர்க்கவோ, பிரித்தெடுக்கவோ, தொகுக்கவோ அல்லது போலிகளை உருவாக்கப் பொறியியலை மாற்றவோ அல்லது மென்பொருளின் மூலக் குறியீட்டை நகலெடுக்கவோ அல்லது மென்பொருளின் அடிப்படையில் எந்தவொரு வருவிப்பு தயாரிப்பையும் (டெரிவேட்டிவ் புராடக்ட்) உருவாக்கவோ வாடிக்கையாளர் முயற்சி செய்யக் கூடாது.

செலவுகள்
இணைய வங்கிச் சேவைகளுக்குப் பொருந்தக்கூடிய அனைத்துக் கட்டணத் தொகைகள் (ஃபீஸ்), செலவுகள், செலவினங்கள் அல்லது கட்டணங்கள் வாடிக்கையாளரின் கணக்கிற்கானதாக இருக்க வேண்டும், மேலும் வாடிக்கையாளரின் கணக்கு (கள்) இல் நேரடியாக டெபிட் செய்ய வாடிக்கையாளர் இதன் மூலம் வங்கியை அங்கீகரிக்கிறார்.

பொருந்தும்/ ஆளுகைச் சட்டம்
இந்த விதிமுறைகள் இந்திய ரிசர்வ் வங்கியால் அவ்வப்போது வெளியிடப்படும் சட்டங்கள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டு நிர்வகிக்கப்படும். இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டின் சட்டங்களுக்கும் இணங்காததற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்தப் பொறுப்பையும் வங்கி ஏற்காது. இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் இணைய வங்கிச் சேவைகளை அணுக முடியும் என்ற யதார்த்தம் மட்டுமே அந்த நாட்டின் சட்டங்கள் இந்த விதிமுறைகள் மற்றும்/ அல்லது வாடிக்கையாளரின் கணக்குகளின் செயல்பாடுகளை நிர்வகிக்கின்றன என்பதைக் குறிக்காது. வாடிக்கையாளரின் கணக்கைப் பராமரிக்கும் வங்கியின் கிளை அலுவலகத்தின் அதிகார வரம்பிற்குள் உள்ள நீதிமன்றங்கள்/ தீர்ப்பாயம் இந்த விதிமுறைகளில் இருந்து எழும் அனைத்திற்கும் தனிப்பட்ட அதிகார வரம்பைக் கொண்டிருக்கும்

பொறுப்புதுறப்பு
டாய்ச் வங்கியின் தனியுரிமைக் கொள்கையைக் காண இங்கே கிளிக்செய்யவும்.